# THE FXEC TIMES
Empowering your Future

தமிழ்

www.francisxavier.ac.in
facebook.com/fxengg/
instagram.com/fx_ec/

மலர் - 1
இதழ் - 3

27 ஜூலை 2022


# எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு விழா - 2022!

## நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு விருதுகள் வழங்கினார்

நெல்லை வண்ணார்பேட்டை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு விழா ஸ்காட் கல்வி நிறுவனர் S.கிளிட்டஸ் பாபு தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. இதில் முன்னணி நிறுவனங்களில் உயர் பதவிகளில் பணிபுரியும் முன்னாள் மாணவர்கள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

.

எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியில் முன்னாள் மாணவர்களுக்கான சங்கம் செயல்பட்டு வருகிறது. அதன் இயக்குநராக பொதுமேலாளர் s.கிருஷ்ணகுமார் (நிர்வாகம்) செயல்பட்டு வருகிறார். இந்த சங்கம் கல்லூரியில் பயிலும் இன்னாள் மாணவர்கள் வேலைவாய்ப்பு திறனை அதிகரிப்பதற்காகவும், முன்னணி நிறுவனங்களின் பணிபுரியும் முன்னாள் மாணவர்கள் மூலம் வழிகாட்டுதல், ஆலோசனைகளையும் அளித்து வருகிறது. மேலும், ஆண்டு தோறும் அவர்களை அழைத்து விருதுகளை வழங்கி பாராட்டி வருகிறது.







முனைவர் S.கிளிட்டஸ்பாபு முன்னாள் மாணவர்கள் ஆல்பா பிசினஸ் சொலுஷன்ஸ் தலைமை செயல் அதிகாரி திரு.செல்லையா முத்துராஜன், A கிளைட்டன் ஜார்ஜ் பால், ஜே.பி.ஆர் உரிமையாளர் பி. ஜெய்சன் னுக்கும் விருதுகளை வழ ங்கி பாராட்டினார்.

இந்த ஆண்டு கல்லூரி வளாகத்தில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு மீண்டும் இணையும் விழா (Alumni Reunion 2022) நடைபெற்றது. இதில் கணினி-த்துறை தலைவர் முனைவர் அரவிந்த் சுவாமி நாதன் வரவேற்புரையாற்றினார்

இந்த விழாவுக்கு ஸ்காட் கல்வி குழும நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ்பாபு தலைமை தாங்கி, விருதுகளை வழங்கி பாராட்டினார். மேலும் முனைவர் S.கிளிட்டஸ்பாபு 2022ம் ஆண்டுக்கான அலுமினி இதழையும் அவர் வெளியிட்டார்.

இந்த விழாவில் சிறந்த முன்னாள் மாணவர் தொழில் முனைவோர் விருது ஆல்பா பிசினஸ் சொலுஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக பணியாற்றி வரும் திரு.செல்லையா முத்துராஜன், (Talento Academy இன் இணை நிறுவனர்) அவர்களுக்கு வழங்கப்பட்டது . அடுத்தபடியாக புகழ் பெற்ற முன்னாள் மாணவர் விருது ஜேபிஆர் கட்டுமானங்களின் உரிமையாளராக உள்ள திரு. பி. ஜெய்சன், (சிவில் இன்ஜினியரிங்) அவர்களுக்கு வழங்கப்பட்டது. முக்கிய முன்னாள் மாணவர் விருது காக்னிசண்ட் டெக்னாலஜி சொல்யூஷன்ஸ்-ல் (Cognizant technology solutions) பணியாற்றி வரும் திரு. A கிளைட்டன் ஜார்ஜ் பால் அவர்களுக்கு வழங்கப்பட்டது. விருதுகளை முனைவர் S.கிளிட்டஸ்பாபு வழங்கி பாராட்டினார். விழாவில் பேசிய அவர், இன்னாள் மாணவர்களுக்கு முன்னாள் மாணவர்கள் நல்ல வழிகாட்டியாகவும், தொழில் நிறுவனங்களின் தற்போதைய பயிற்சி முறையை கற்பிக்க வேண்டும் என்றும் மாணவர்களுக்கு எதிர்கால பார்வையை (future vision) வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்-கொண்டார்.

முன்னாள் மாணவர் சங்க இயக்குநர் S.கிருஷ்ணகுமார் (பொது மேலாளர்) பேசுகையில், எப்.எக்ஸ் கல்லூரியில் பயின்ற மாணவர்கள் திறமையுடன் உயர் பதவிகளில் பணியாற்றி வருவது பெருமைக்குரியதாக உள்ளது. அவர்களது அனுபவம், திறன் ஆகியவை நமது இன்றைய மாணவர்களை வழிகாட்டுவதற்கு பேருதவியாக இருக்கும். மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த வேலைவாய்ப்பை பெறுவதற்கு அவர்கள் உறுதுணையாக செயல்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இவ்விழாவில் கல்லூரி முதல்வர் V.வேல் முருகன், வேலைவாய்ப்பு துறை டீன் முனைவர் ஞான சரவணன், முனைவர் லூர்தஸ் பூபாலராயன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள் . இந்த விழாவையொட்டி 2012 படிப்பை முடித்த பத்தாண்டு கடந்த மாணவர்களுக்கு பூங்கொத்து கொடுத்து கேக் வெட்டியும் சிறப்பிக்கப் பட்டனர்.

இந்நிகழ்வில் ஸ்காட் பள்ளி--களின் தாளாளர் திருமதி தர்ஷினி அருண் பாபு, வேலை வாய்ப்பு துறை டீன் ஞான சரவணன் பயிற்சித்துறை துறை டீன் பாலாஜி, அனைத்து துறை பேராசிரியர்கள், மற்றும் சென்னை அலுமினியம் சங்க செயலாளர் குமாரசாமி, பொருளாளர் அருண், (மேலாளர், ரொனால்ட்) மற்றும் ரிசான் கம்யூனி கேஷன் டீம் லீடர், துர்கா சாந்த், முன்னாள் மாணவ, மாணவிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை முன்னாள் எம்.பி.ஏ மாணவி தீபலஷ்மி தொகுத்து வழங்கினார் முன்னாள் மாணவர் துர்காசாந்த் நன்றியுரையாற்றினார்.







## தொழில்துறை ஆதரவு கல்வி

# எல். அண்ட்.டி எஜுடெக் நிறுவனத்துடன் எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம்!

நெல்லை வண்ணார்ப் பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியின் எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட்ரானிக்ஸ், மெக்கானிக்கல் மற்றும் சிவில் ஆகிய 3 துறை மாணவர்கள் எல்.அண்ட்டி எஜுடெக் (L& T EduTech) நிறுவ னத்தின் தொழில் துறை ஆதரவு கல்வி (Industrial supported course) பெறுவதற்காக எப்.எக்ஸ் பொறி யியல் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

எல். அண்ட் டிஎஜுடெக் (L & T EduTech) நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட தொழிற்சாலை ஆதரவு கல்வி (Industrial supported course) பாடங்களை மாணவர்கள் விருப்பப்பாடமாக தேர்வு செய்து படித்து வேலைவாய்ப்புகளை பெற்றுக் கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.



தொழில்துறை ஆதரவு கல்விக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது

இந்நிகழ்ச்சியில் (L&T) நிறுவ-ன தலைமை மேலாளர் வினோத் ஸ்ரீனி வாசன் பேசுகையில், எங்களது தொழில் நிறுவனத்தில் பணியாற்ற உதவும் வகையில், இந்த விருப்பப்பாடம் உதவிகரமாக இருக்கும் என்று தெரிவித்தார். பொதுமேலா ளர் முனைவர் K.ஜெயக்குமார் (வளர்ச்சி), தொழில் முனை-வோர் துறை இயக்குநர் முனைவர் லூர்தஸ் பூபாலராயன் கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன் உரையாற்றினார்கள் . முன்னதாக கல்லூரியின் எலக்ட்ரிக்கல் அண்ட் எலக்ட் ரானிக்ஸ் துறை தலைவர் முனைவர் J.ஜாஸ்பர் .ஞானச்சந்திரன் வரவேற்புரையாற்றினார் இதனை-யடுத்து புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. கல்லூரியின் முன்னாள் (EEE-2007) மாணவரும் எல். அண்ட் டி (I&T) விற்பனை மேலாளர் R.வெங்கடேஷ் கலந்து கொண்டார். பேராசிரியர் ரவி நன்றியுரையாற்றினார்.

இதற்காக பெரு முயற்சி மேற்கொண்ட பொதுமேலாளர்கள் K.ஜெயக்குமார், S.கிருஷ்ணகுமார் (நிர்வாகம்) கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல் முருகன், வேலை வாய்ப்புத் துறை டீன் ஞானசரவணன், பயிற்சித் துறை டீன் பாலாஜி மற்றும் பேராசிரியர்கள் உள்ளிட் டோரை ஸ்காட் கல்வி குழும நிறுவனர் S.கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் C.அருண் பாபு ஆகியோர் பாராட் டினார்

## விருந்தினர் விரிவுரை



எப்.எக்ஸ்.பொறியியல் கல்லூரி மூன்றாம் ஆண்டு கணினி அறிவியல் மற்றும் பொறியியல் மாணவர்களுக்காக கம்ப்யூட்டர் சொசைட்டி ஆஃப் இந்தியாவுடன் இணைந்து கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையால் அசூர் எஸ்.க்.எல் டேட்டா பேஸ் ("Azure SQL Database") என்ற தலைப்பில் விருந்தினர் விரிவுரை விளக்க வகுப்பு நடத்தப்பட்டது. அட்டோஸ் சின்டெல்லின் அசோசியேட் ஆலோசகர் மற்றும் மைக்ரோசாஃப்ட் அஸூர் டெவலப்பர் அசோசியேட் (Microsoft Azure Developer Associate) திரு. ஜி.நவீன் நிகழ்ச்சியின் சிறப்புவிவுரையாளராக இருந்தார். ஆதார் நபர் டேட்டாபேஸ் மற்றும் SQL வினவல் மொழியின் அடிப்படைகள் பற்றிய விளக்கத்தை அளித்தார். (Azure இல் SQL) ஐப் பயன்படுத்துவது பற்றி அவர் விரிவுரை அளித்தார் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை முனைவர் ஜி.அரவிந்த் சுவாமிநாதன், முன்னாள் மாணவர்கள் R. ப்ரீத்தி மற்றும் R. சிவா நர்மதா மற்றும் முனைவர் E. மனோகர் செய்திருந்தனர்.

# எப்.எக்ஸ். கல்லூரி மெக்கானிக்கல் துறை மாணவர்கள் கேரளா தும்பா ராக்கெட் தளம் பார்வையிடல்!

எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியின் மெக்கானிக்கல் பொறியியல் துறையின் விண்வெளி பாடப்பிரிவைச் சேர்ந்த மாணவர்களை கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தின் தும்பா ராக்கெட் ஏவுதளத்திற்கு அழைத்து சென்று பார்வையிடல் பயிற்சி அளிக்கப்பட்டது.

பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியின் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் துறையில் விண்வெளி பாடப் பிரிவு உள்ளது. எரிவாயு இயக்கவியல் மற்றும் ராக்கெட் உந்துவிசை (Gas dynamics and rocket propulsion) என்ற எலெக்ட்டிவ் பிரிவை 30 மாணவர்கள் விருப்பப் பாடமாக தேர்வு செய்துள்ளனர். இதற்காக கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளிமையத்தில் அமைந்துள்ள தும்பா பூமத்திய ரேகை ஏவுதள தளத்தைப் பார்வையிட அழைத்து செல்லப்பட்டனர். உத்தரவுகள் மற்றும் செயற்கைகோள் சென்ற பாதை மற்றும் அறிவுறுத்தல்கள் ஆகியவற்றை விண்வெளி ஆய்வு மைய குழுவினர் விளக்கம் அளித்தனர். இதனையடுத்து விண்வெளி அருங்காட்சியகத்தில் இதுவரை விண்ணில் செலுத்தப்பட்ட ராக்கெட் ஏவுகணை மாதிரிகள், செயற்கைக் கோள்கள் மற்றும் விண்வெளி செயற்கை கோள்களின் மாதிரிகளை பார்வையிட்டனர்.



விண்வெளி அருங்காட்சியகத்தை மாணவர்கள் பார்வையிட்டனர்.

மேலும், அந்த மாதிரிகள் பற்றிய அரிய தகவல்கள் உள்ளிட்ட விபரங்கள் அனைத்தும் அருங்காட்சியக வழிகாட்டு குழுவால் மாணவர்களுக்கு விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது. அங்கு வளிமண்டல ஆய்விற்காக RH300 செயற்கைகோள் ஏவுகணை (sounding Rocket) மூலம் விண்ணில் செலுத்துவதை மாணவர்கள் புரிந்து கொண்டார்கள் . ஏவுகணை 123 வினாடிகளில் சுமார் 67 கிமீ உயரத்தை அடைந்து, செயற்கை கோளை விடுவித்துக் கொண்டது. அந்த செயற்கைகள் காற்று மண்டலத்தில் நிலை நிறுத்தப்பட்டது. இந்த செயற்கை கோளின் அனைத்து நிலையான இயக்க நடைமுறைகளும் மாணவர்களுக்கு காண்பிக்கப்பட்டது. பின்னதாக RH300 செயற்கைகோள் கட்டுப் பாட்டு அறையை மாணவர்கள் பார்வையிட்டனர்.




விண்வெளி மையம்



விண்வெளி வீரர் மாதிரிகள்

ஏற்கனவே மெக்கானிக் துறை மாணவர்களுக்கு கூடங்குளம் அணுமின் நிலையத்திற்கும் அழைத்து சென்றும் பார்வையிடல் பயிற்சி அளிக்கப்பட்டது. 'தொழிற்சாலைகளை (Industry visit) நேரில் பார்வையிடும் பயிற்சிகளை அளிப்பதில் எப்.எக்ஸ் கல்லூரி சிறப்பிடத்தை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது .

இந்நிகழ்வை கல்லூரி நிர்வாகம் வழிகாட்டுதலின் பேரில் மெக்கானிக்கல் துறை தலைவர் முனைவர் R.சாமுவேல் ஹேன்சன், பேராசிரியை முனைவர் ஜீனத்துல் பரிதா அப்துல்கனி மற்றும் பேராசிரியர்கள் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர். இந்நிகழ்வு மாணவர்களுக்கு பயனுள்ளதாக அமைந்திருந்தது.

## கல்லூரி நிர்வாகத்திற்கு மாணவர்கள் பாராட்டு



**S.ஆனந்தராஜ் (III Mech**



**S.அந்தோணி சுஜித் (III Mech)**



**B.செல்வராஜ் (III Mech)**



**C.விஜய் (III Mech)**

**கல்லூரி நிர்வாகத்தின் ஏற்பாட்டின் பேரில் தும்பா ராக்கெட் தளத்திற்கு அழைத்து சென்று பார்வையிட வைத்ததும், அங்கு எங்களது பாடப் பிரிவுக்கான பயிற்சிகளை அளித்தது மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. செயற்கைகோள் ஏவப்பட்ட காட்சியையும் நாங்கள் பார்த்தோம். இதற்காக கல்லூரி நிர்வாகத்திற்கும், துறை பேராசிரியர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்று மாணவர்கள் கருத்து தெரிவித்தனர்.**

# கூடங்குளம் அணுமின் நிலையத்தில் பயிற்சி!

எப்.எக்ஸ் கல்லூரியின் மெக்கானிக்கல் துறை மாணவர்களுக்கு கூடங்குளம் அணுமின் நிலையத்தில் இன்டென்ஷிப் பயிற்சிக்காக டிசைன் அண்ட் அனலைசிஸ் மற்றும் உற்பத்தி, வளர்ச்சி ஆய்வகத்தை சேர்ந்த 8 மாணவர்கள் T.ஆபிரகாம் ஜெபகனிராஜ், R.கோகுல், D.கிப்ட்சன்ராஜ், R.கோடீஸ்வரன், M.இசக்கி, K.கதிரேசன், M.ஆல்தோஸ் மத்யாஸ், M.கார்த்திக் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு 12 நாள்கள் பயிற்சி அளிக்கப்பட்டது.




மெக்கானிக்கல் துறை மாணவர்கள்



கூடங்குளம் அணுமின் நிலையம்

அணுமின் நிலையம் 1, 2 ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து முதலில் விளக்கம் அளிக்கப்பட்டது. இதனையடுத்து அணுமின் நிலையத்தின் இயந்திரவியல் செயல்பாடுகள் குறித்து மாணவர்களுக்கு விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது. 1 லட்சம் லிட்டர் கடல் நீரை அணுமின் நிலையத்திற்குள் கொண்டு வந்து, அதனை கொதிக்கலனில் கொதிக்க வைத்து கிரிட் முறையில் (Grid system) செய்திருந்தனர். மின் உற்பத்தி செய்யப்படுகிறது. கொதித்த நீர் இயந்திரம் மூலம் குளிர வைக்கப்பட்டு, சுழற்சி முறையில் மீண்டும் கடல் நீரை குழாய் மூலமாக கொண்டு வந்து மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. இந்த தொழில் நுட்பங்கள் அனைத்தும் மாணவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

.மேலும் கட்டுப்பட்டு அறைக்கும் மாணவர்களை அழைத்து சென்று பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சியை அணுமின் நிலைய விஞ்ஞானி அதிகாரி ஸ்ரீராம் விளக்கினார் மின்சாரம் தயாரிக்கப்படும் உத்தரவுகள், செயல்பாடுகள் அறையை பார்வையிட்டனர்.

அணு மின்நிலையம் 3, 4 உலைகள் அமைக்கப் பட்டுவரும் கட்டமைப்புகளையும் மாணவர்கள் பார்த்தனர். பயிற்சி குறித்த அறிக்கையை மாணவர்கள் தங்களது துறையில் சமர்ப்பித்தனர். இதற்கான ஏற்பாடுகளை துறை தலைவர் சாமுவேல் ஹேன்சன் மற்றும் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.



## பிரேக் தி கிளாஸ் பயிற்சி

பிரான்சிஸ் பொறியியல் கல்லூரியின் எலக்ட்ரிகல் அண்ட் எலக்ட்ரானிக் துறை சார்பில் Break the class பயிற்சி பட்டறை நடைபெற்றது. இந்த பட்டறையில் நற்பண்புமிக்க தலைமைத் துவமும் பயனுள்ள தொடர்பும் என்ற தலைப்பில் மாணவர் களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. தூத்துக்குடி ஜே.சி.ஐ ஹெர் குலே னியம் எலைட் பிரைவேட் லிமிடெட் (JCI TUTICORIN HERCU LANEUM ELITE PVT. LTD) சார்பில் R.D.R.D.ராஜா குமரன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு மாணவர்களுக்கு செயல்திறன் குறித்த கருத்துக்களை எடுத்து ரைத்தார். இந்நிகழ்ச்சியை துறை தலைவர் முனைவர் ஜாஸ்பர் ஞானச் சந்திரன் (EEE), முனைவர் அன்ன பாண்டி, உதவி பேராசிரியர் செல்வகுமார் ஆகி யோர் ஒருங்கிணைத்தனர்.



## ஏ.கே. இன்ஃபோ பார்க் நிறுவனத்தை (I AI & DS) மாணவர்கள் பார்வை!



பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியின் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறை முதல் ஆண்டு மாணவர்களுக்கான தொழில்துறை பார்வையிடல் ஏற்பாடு செய்யப்பட்டது. இதற்காக நாகர் கோவில் ஏ.கே. இன் போபார்க் பிரைவேட் லிமி டெட் (AK INFOPARK (P) LTD, Nagercoil) நிறுவனத்திற்கு 52 மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். மாண வர்கள் வளாகத்திற்குள் நுழைந்தவுடன், முதல் கட்டமாக நிறுவனத்தின் எச்.ஆர். (HR) திரு. ஷாஜின் நிறுவனம் சார்ந்த பொது வான கருத்துக்களை எடுத்து ரைத்தார்.

இதனையடுத்து ஏ.கே. இன்போபார்க் நிறுவ னத்தின் சாப்ட்வேர் டெவல ப்பர் கார்த்திகா, முதலாம் ஆண்டு செயற்கை நுண்ண றிவு மற்றும் தரவு அறிவியல் (AI&DS) மாணவர் களுக்கு நிறுவன த்தின் அமைப்பு, பணி கலாச்சாரம், தொழில் வாய்ப்புகள் மற்றும் பணி யாளர் நலன்கள் குறித்து விளக்கி கூறினார்.

அடுத்த படியாக. நிறுவன அதிகாரி காட்வின் சாப்ட்வேர் வளர்ச்சி குறித்து விளக் கமாக எடுத்துரைத்தார். அவர் கூறுகையில், முன் மாதிரி உருவாக்கம் (prototype development), மென் பொருள் மேம்பாட்டு வாழ்க்கைச் சுழற்சி கருத்துகள் மற்றும் சோதனை (Software develop ment life cycle concepts and testing), தரவு விஞ்ஞானி, சோதனையாளர் (Tool used by Data Scientist), சிஸ்டம் இன்ஜி னியர் (System Engineer), சர்வர் இன்ஜி னியர் (Server Engineer), யுஐ/யுஎக்ஸ் டிசைனர் மற்றும் ஃபுல் ஸ்டாக் டெவலப்பர்கள் பயன்படுத்தும் மொழிகள் (Ui/Ux designer and languages used by full stack developer), பின் எண்ட் டெவலப்பர்கள் (Back end developers front end developers), மொபைல் அப்ளி கேஷன் டெவலப்பர் (mobile application developer) ஆகிய வற்றைப் பற்றி அவர் விளக்கினார்.

இந்த தொழில் நிறுவன விசிட் (Industry visit) மூலம் மென்பொருள் மேம்பாட்டில் சாப்ட்வேர் டெவெலப் மெ ண்ட்டில் மாணவர்கள் தங் களை சுய பரிசோதனை செய்யும் வாய்ப்பைப் பெற் றனர்.

இதற்கான ஏற்பாடுகளை செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறையின் தலைவர் டாக்டர். A.அனிதா, உதவி பேராசி ரியர்கள் P. சூரிய பிரபா, மற்றும் S.பூர்ணம் ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாக செயல்பட்டனர். இத்திட்டத் தின் மூலம் மொத்தம் 52 மாண வர்கள் பயனடைந்தனர்.

### இண்டஸ்ட்ரி விசிட் - மாணவர்கள் கருத்து



I AI & DS



**கே.மாரிசெல்வம்** **M , ஜெபின்**

**எங்களுக்கு இண்டஸ்ட்ரி விசிட் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. நாங்கள் அதிகமான விஷயங்களைக் கற்றுக்கொள்ள உதவியாக இருந்தது. சாப்ட்வேர் வளர்ச்சி குறித்து நிறுவனத்தின் விளக்கம் தெளிவாக இருந்தது. மேலும், அவர்கள் முடித்துவைத்த திட்டங்களை எங்களுக்குக் காண்பித்தனர் என்று மாணவர்கள் கே.மாரிசெல்வம், M , ஜெபின் கருத்து தெரிவித்தனர்.**



## கணினித்துறை கிளவுட் கம்ப்யூட்டிங் குறித்து விருந்தினர் சிறப்புரை!



எப்.எக்ஸ். பொறியியல் பயிலும் மூன்றாம் ஆண்டு கணினி அறிவியல் மற்றும் பொறியியல் மாணவர்களுக்காக கம்ப்யூட்டர் சொசைட்டி ஆஃப் இந்தியாவுடன் இணைந்து கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையால் “கிளவுட் அண்ட் டெவொப்ஸ்” என்ற தலைப்பில் விருந்தினர் விரிவுரை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர் Atos Syntel இன் Azure DevOps இணை ஆலோசகர் பொறியாளர் நிபுணர் திரு. மொஹமட் அஸாருதீன் கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சி பிரார்த்தனையுடன் தொடங்கியது. கணினித்துறை தலைவர் பேராசிரியர் முனைவர் ஜி. அரவிந்த் சுவாமிநாதன், சிறப்பு விருந்தினர்களை வரவேற்று மாணவர்களுக்கு அறிமுகம் செய்தார். மைக்ரோசாஃப்ட் அஸூர் மற்றும் பல்வேறு கிளவுட்(cloud) சேவைகள் மற்றும் அவர்களால் வழங்கப்படும் மைக்ரோசாஃப்ட் சான்றிதழ்கள் குறித்து சிறப்பு விருந்தினர் விளக்கமாக கூறினார். DevOps டேவோப்ஸ் பற்றிய அறிமுகம் குறித்தும் உரைநிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை டாக்டர் ஜி.அரவிந்த் சுவாமிநாதன் முன்னாள் மாணவர்களின் உதவியோடு செய்தார். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ப்ரீத்தி மற்றும் சிவா நர்மதா மற்றும் முனைவர் . E. மனோகர் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

### ஐடி தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான மென் திறன்கள்”

“ஐடி தொழில்நுட்ப வல்லு நர்களுக்கான மென் திறன்கள்”என்ற தலைப்பில் கெஸ்ட் லெக்சர் கம்ப்யூட்டர் சொசைட்டி ஆஃப் இந்தியா வுடன் இணைந்து கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையால் முதலாம் ஆண்டு கணினி அறிவியல் மாணவர் களுக்கு நடத்தப்பட்டது.

நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர் தெற்கு மண்டல செயல்பாட்டு மேலாளர் மற்றும் மூத்த நிர்வாகி, ஸ்டெம் லேர்னிங் பிரைவேட். லிமிடெட் (ஸ்டெம் லேர்னிங் பிரைவேட் லிமிடெட்) ஆர். நாகராஜன் உடையார், (முன்னாள் மாணவர் 2017), கலந்து கொண்டார்.

கணினித்துறை தலைவர் முனைவர் . ஜி.அரவிந்த் சுவாமி நாதன், விருந்தினரை வர வேற்று அறிமுகம் செய்தார். தனிப்பட்ட திறன்கள், கேட்கும் திறன் மற்றும் தகவல் தொடர்பு திறன் பற்றி விருந்தினர் R.நாக ராஜன் கற்பி த்தார்.

## சர்வதேச யோகா தின நிகழ்ச்சி

பிரான்சிஸ் சேவியர் பொறி யியல் கல்லூரியின் NSS குழுவினர் சர்வதேச யோகா தின கொண்டாட்ட விழிப் புணர்வு நிகழ்ச்சி நடத்தப் பட்டது. இங்கு சுமார் 25 மாணவர்கள் பங்கேற்று யோகா பயிற்சிகளை செய் தனர்.

இந்த நிகழ்ச்சியை கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல் முருகன், வளாக மேலாளர். J.ஜஹாரியா கேப்ரி யல் துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியை என்எஸ்எஸ் திட்ட அலுவலர் முனைவர் .R.சுமன் ஒருங் கிணைத்தார்.



## பவர் பிளாட்ஃபார்ம்” குறித்த பயிலரங்கம்



எப்.எக்ஸ் கல்லூரி “மூன்றாம் ஆண்டு கணினி அறிவியல் மற்றும் பொறியியல் மாணவர்களுக்காக “பவர் பிளாட்ஃபார்ம்” குறித்த பயிலரங்கம் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையால் இந்திய கணினி சங்கத்துடன் இணைந்து நடத்தப்பட்டது. நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளர் அடோஸ் சின்டெல் இணை ஆலோசகர் அருண் கார்த்திகேயன் UI வடிவமைப்புகள் மற்றும் ஆற்றல் பயன்பாடுகள் குறித்த பயிற்சியை அளித்தார், அதைத் தொடர்ந்து மாணவர்களிடையே UI வடிவமைப்பு மற்றும் முன்மாதிரி பற்றிய போட்டியும் நடத்தப்பட்டது. மாணவர்கள் அணிகளாகப் பிரிக்கப்பட்டு, மார்வெல் டிசைனிங் அப்ளிகேஷன் மூலம் தங்களின் காகித முன்மாதிரிகளைத் தயாரிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். மாணவர்கள் தங்கள் யோசனைகளை தீவிரமாக முன்வைத்து, அவர்களின் முன்மாதிரிகளை முன்வைத்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை முனைவர் G.அரவிந்த் சுவாமிநாதன், டாக்டர். E. மனோகர் வழிகாட்டுதலின் பேரில் முன்னாள் மாணவர்கள் R. ப்ரீத்தி மற்றும் R. சிவா நர்மதா ஆகியோர் செய்திருந்தனர்.

## முதல் ஆண்டு மாணவர்களுக்கு பயிற்சி பட்டறை!




முதல் ஆண்டு செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் மாணவர்களுக்கான நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறை சார்பில் ஸ்டார்ட்-அப்களுக்கான குறைந்தபட்ச சாத்தியமான தயாரிப்பை ஆராய்வதற்கான பயிற்சி பட்டறையை ஏற்பாடு செய்தது. இந்த பயிற்சி பட்டறையில், எம்பெடெட் மற்றும் ஐ.ஓ.டி (IOT) இன்குபேஷன் சென்டரின் பொறுப்பாளரான முனைவர் K.லக்ஷ்மி நாராயணன்."ஸ்டார்ட்-அப்களுக்கான குறைந்தபட்ச சாத்தியமான தயாரிப்பை ஆராய்தல்" என்பதன் முக்கிய கருத்துக்கள் குறித்து மாணவர்களுக்கு விளக்கினார்.



இந்த அமர்வின் போது, குறைந்த பட்ச சாத்தியமான தயாரிப்பு என்பது, முன்கூட்டியே தத்தெடுக்கும் வாடிக் கையாளர்களை ஈர்ப்பதற்கும், தயாரிப்பு மேம்பாட்டு சுழற்சியின் தொடக்கத்தில் ஒரு தயாரிப்பு யோசனையை (idea) சரிபார்க்கவும் போதுமான அம்சங்களைக் கொண்ட தயாரிப்பு என்பதை மாணவர்கள் நன்கு புரிந்துகொண்டனர். மென்பொருள் போன்ற தொழில்களில், குறைந்தபட்ச சாத்தியமான தயாரிப்பானது தயாரிப்பு குழுவிற்கு பயன்பாட்டாளர் கருத்துக்களை விரைவாகப் பெறவும், தயாரிப்பை மேம்படுத்தவும் உதவும் என்ற கருத்துகள் மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. இந்த பயிற்சி பட்டறையை செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறையின் தலைவர் முனிவர் A.அனிதா ஏற்பாடு செய்தார். உதவி பேராசிரியர் B.சூரியபிரபா, ஒருங்கிணைப் பாளராக செயல்பட்டார்.

## பன்னாட்டு நிறுவனங்களில் பணிபுரிவதற்காக பிற மொழிகள் கற்கும் மாணவர்கள்!




எப்.எக்ஸ் பொறியியல் கல்லூரியில் பயிலும் மாணவர்கள் வெளி மாநில ங்களில் மொழி பிரச்னை இல்லாமல் பணிபுரிவதற்காக பிற மொழிகள் கற்று தரும் திட்டம் பயிற்சி துறை சார்பில் கல்லூரி நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது. ஐ.டி துறை சார்பில் நடத்தப்படும் இந்த வகுப்பில் மாணவர்கள்


ஹிந்தி படிக்கும் மாணவர்கள்



ஆர்வத்துடன் ஹிந்தி பேச்சு மொழியை கற்று வருகின்றனர். பன்னாட்டு நிறுவனங்களின் வட மாநிலங்களில் பணிபுரியும் போது மொழி பிரச்னை ஒரு தடையாக இருக்க கூடாது என்ப தற்காக இந்த திட்டத்தை வெற்றிகரமாக நடத்தி வருகிறது. ஜப்பான், ஜெர்மன். பிரெஞ்சு ஆகிய மொழி களையும் பயிற்றுவிக்க ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. இந்த பயிற்சியை பயிற்சி துறை டீன் முனைவர் பாலாஜி வழிகாட்டுதலின் பேரில் ஐ.டி துறை உதவி பேராசிரியர் தீப்தி, கணினித் துறை உதவி பேராசிரியர் பாக்கியலட்சுமி ஆகியோர் ஒருங்கிணைப்பாளர் களாக செயல்பட்டு வருகின்றனர்.


## தொழில்நுட்ப திறன் மற்றும் மேம்பாட்டு துறை மற்றும் கணினி அறிவியல் துறை இணைந்து திறன் பயிற்சி!

எப்.எக்ஸ் பொறியியல் கல்லூரியின் தொழில்நுட்ப திறன் மற்றும் மேம்பாட்டு துறை மற்றும் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை இணைந்து கல்லூரி மாண வர்களுக்காக முழு ஸ்டாக் ஜாவா எசென்ஷியல்-02 (Full stack java essential-22) பற்றிய திறன் பயிற்சியை நடத்தியது.



திறன் பயிற்சியாளரான. பேராசிரியர் முனைவர் G.அரவிந்த் சுவாமிநாதன், திறன் பயிற்சிகளை அளித்தார். இதில் விடுதி மாணவர்கள் திறன் பயிற்சியில் கலந்து கொண் டனர். இந்தப் பயிற்சியில் "கோப் புகள், AWT கூறுகள், ஸ்விங் கூ . றுகள் மற்றும் GUi கூறுகளைப் பயன்படுத்தும் திட்டங்கள்" என்ற தலைப்பில் விளக்கம் அளிக்கப் பட்டது. இந்த ப்ரொஜெக்ட்டில் அனைத்து மாணவர்களும் ஆன் லைன் தேர்வு, எடிட்டர், வங்கித் திட்டம், கால் குலேட்டரை உருவாக்குதல் மற்றும் ஜாவாவில் AWT மற்றும் ஸ்விங் கூறுகளை வெற்றி கரமாகப் பயன்படுத்துதல் போன்ற திட்டங் களை திறன் பயிற்சியாளர் கணினித்துறை மாணவர்களுக்கு அளித்தார்

## இயந்திரவியல் துறை மாணவர்களுக்கு ஆன்லைன் கருத்தரங்கு!




எப்.எக்ஸ் பொறியியல் கல்லூரியில் இயந்திரவியல் துறை மாணவர்களுக்கு வெபினார் என்ற ஆன்லைன் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப் பட்டது.

“மென்பொருள் துறையில் மெக்கானிக்கல் இன்ஜினி யர்களுக்கான மைல்கல்” என்ற தலைப்பில் ஒரு வெபினார் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப் பட்டது. கூகுள் மீட் மூலம் ஆன்லைன் முறையில் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் துறை மாணவர்கள் கலந்து கொண் டனர்.

இந்நிகழ்வில் சிறுசேரி டிசிஎஸ் நிறுவனத்தில் பணி புரியும் சிஸ்டம் பொறியாளர் எம்.ஆதி ராஜா சிறப்பு பங்கேற் பாளராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

இயந்திரவியல் துறை உதவி பேராசிரியர் வி.டி. விமலானந்த் ஆன்லைன் கருத்தரங்கு நிகழ் ச்சியை ஒருங்கிணைத்தார். துறை தலைவர் முனைவர் R.சாமுவேல் ஹேன்சன் ஒருங்கிணைப்பாளராக ஏற்பாடு செய் தார்.

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் பிரிவுகளுக்கு தொழில்நுட்ப கலந்துரையாடல் ஆலோசனை!

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனகள் எதிர் கொள்ளும் பிரச்சனை களுக்குத் தீர்வு காணும் வகையில் தொழில்நுட்பத் தலையீட்டை மேம்படுத்து வதற்கும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் பிரிவு களுக்கு ஆலோசனைகளை மேம்படுத்துவதற்கும் தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம், MSME உதவி இயக் குநர் பொறியாளர் சிமி யோனுடன் மாணவர் கலந்து ரையாடலை கல்லூரி நிர் வாகம் ஏற்பாடு செய்தது. . Er.Simiyon MSME பிரிவுகள் எதிர் கொள்ளும் பிரச்சனை களை விளக்கமாக எடுத்து ரைத்தார்.

மேலும் MSME பிரிவுகளின் செயல்பாட்டுத் திறனை மேம் படுத்த தொழில் நுட்பத்தை அணுக வேண்டும் என்று வலியு றுத்தினார்.

மேலாண்மைக் கல்வித் துறையின் ஆலோச னைகளை வழங்குவதற்கான சாத்தி யமான கருத்துகளையும் அவர் முன் வைத்தார். MSME பிரிவு களில் 5S-ஐ அறிமுகப்படுத்து தல், Tally பயிற்சி அளிப்பது, மற்றும் ஆய்வு செய்ய நேரில் சென்று பார்வையிட முடிவு செய்யப்பட்டது. மீனவர்கள் மற்றும் உலர் மீன் ஏற்றுமதியாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித் தும் கலந்துரையாடப்பட்டது. சோலார் உலர்த்தியைப் பயன் படுத்தி சாத்தியமான தீர்வு கள் காணவும் ஆலோசிக்கப்பட்டது. சென்னை முட்டுக்காடு பகுதி யில் இயங்கி வரும் மீன் வளக் கல்லூரிக்குச் சென்று மீன்பிடித்


தொழில்நுட்ப ஆலோசனைகள் குறித்து கலந்துரையாடுகின்றனர்.

தொழிலில் ஏற்படும் பிரச்ச னைகளை அறிந்து கொள் ளுமாறு ஆசிரியர்களை கேட்டுக் கொண்டார்.

மேலும் வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பொறியாளர் களைச் சந்தித்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர் களால் உருவாக்கப்பட்ட முன் மாதிரி களை விளக்குமாறு அவர் அறி-வுறுத்தினார்.

பொறியியல் துறையைச் சேர்ந்த .சுமில் குமரன், சிவில் . இன்ஜினியரிங் அப்ளைடு லேப்கள் மூலம் வழங்கக் கூடிய




.வழக்கு அடிப்படையில் சந்தைப் படுத்தல் நடவடிக்கைகளை மேம் படுத்த ஆன்லைன் தளத்தை உருவாக்குதல், தங்க நகைக் குழுவிற்கான GST தொடர்பான ஆலோசனை போன்ற வாய்ப்பு களை ஆராயுமாறு திருமதி. அனிரோஸ் நிர்மலா விடம் அவர் கேட்டுக் கொண்டார்.

மண்பாண்ட பிரிவுகள் எதிர் கொள்ளும் பிரச்சனைகளை சமாளிப் பதற்கு தொழில்நுட்ப தலையீடுகள் குறித்து விவாதி த்தார்.

இந்தக் கலந்துரை யாடலில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் துறையைச் சேர்ந்த டாக்டர் .கண்ணன் மற்றும் திரு.ஷேக் சுலைமான் மற்றும் சிவில் இன்ஜினியரிங் துறையைச் சேர்ந்த .சுமில் கும ரன் ஆகியோர் கலந்து கொண் டனர்.

ஐந்தில் சாத்தியமான தொழில் நுட்ப தீர்வுகள் குறித்து விவாதிக்கப்பட்டது. மண் பாண் டங்கள் தயாரிக்கும் பிரிவை சாத்தியமான சேவைகள் குறித்து விவாதித்தார். டைல்ஸ், மார் பிள்ஸ், எம் சாண்ட், ஆற்று மணல், கட்டு மானத்திற்கான நீர் மாதிரி மற்றும் மண் பரிசோதனை ஆகியவை குறித்தும் விவாதிக் கப்பட்டது. அனைத்து வகையான சோதனை களையும் தொடங் குவதற்கு அங்கீகாரத்தை செயல் படுத்த விண்ணப்பிக்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டார் ஆலோசனை 'சி' மற்றும் அனை த்து கலந்துரையாடல் களும் மிகவும் பயனுள்ளதாக இருந்தது மற்றும் கலந்து ரையாடலில் கலந்து கொண்ட ஆசிரிய உறுப் பினர்கள் MSME அலகுகளுக்கு அவர்களின் அலகு களின் செயல்பாட்டு திறனை மேம் படுத்துவதற்கு வழங்கக் கூடிய தொழில்நுட்ப தலை யீடுகளில் நிறைய நுண்ணறிவு களைப் பெற்றனர்

கல்லூரி நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வு மாணவர் களுக்கு பயனுள்ளதாக அமைந்தது.